**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.191/2017** P.W. 12

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சுப்ரமணியன் | Caste: | |
| Father's Name . பாலகிருஷ்ணன் | | Calling: டிரைவராக | |
| Village | :. செண்பகராயநல்லூரில் | Religion: இந்து | |
| Taluk | : | Age | . |
| Date | : 04.07.2023 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 04.07.2023

(Accused present. )

**அரசு தரப்பு முதல் விசாரணை.**

நான் செண்பகராயநல்லூரில் வசித்துவருகிறேன். டிரைவராக வேலைப்பார்த்துவருகிறேன். எதிரிகளை தெரியும். அசா1 ஐ தெரியும். இந்த வழக்கு சம்பவம் பற்றி எதுவும் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் கையெழுத்து என்னுடையதில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை .**

போலிசார் விசாரணையின்போது கடந்த 11.09.2010 ம் நான் மளிகை கடையடில் வீயாபாரம் செய்து கொண்டிருந்தேன் என்றும் அப்போது சந்தைக்கு கிழக்கு பக்கத்தில் வசிக்கும் பன்னீர்செல்வம் என்பவரின் மனைவியின் அலறல் சத்தம் கேட்டது என்றும் இதை கேட்ட நான் என் மனைவியை வியாபாரத்தை பார்க்க சொல்லிவிட்டு ஓடினேன் என்றும் அப்போது நடுக்காட்டில் வசிக்கும் குஞ்சு (எ) வெற்றிவேல் இரும்பு கம்பி பாரையுடனும் செண்பகமாறன் மற்றும் சக்திவேல் ஆகியோர்கள் கைகளில் கட்டையுடனும் ஓடிவந்து கொண்டிருந்தார்கள் என்றும் பின்னர் பன்னீர்செல்வம் தனது வீட்டின் தெற்கு பக்கம் உள்ள மதில் சுவர் அருகில் மயக்கமடைந்த நிலையில் இருந்தார் என்றும் அவரது இடது பக்க தலையில் பலமாக அடிப்பட்டு வீக்கமாக இருந்தது என்றும் என்ன விசாரித்தபோது மூவரும் பன்னீர்செல்வத்தின் வீட்டு காம்பவுண்டு சுவரை இடிக்க வந்ததாகவும் அதை கேட்ட பன்னீர்செல்வதை மூவரும் காமகுரோதமான வார்த்தைகளால் திட்டியும் வெற்றிவேல் இரும்பு கம்பி பாரையால் தலையில் அடித்ததாகவும் மற் ற இருவரும் கட்டையால் தகாக்கியதாகவும் சொன்னார்கள் என்றும் காயம்பட்ட பன்னீர்செல்வத்தை அவரின் மனைவியும் மற்றவர்களம் சிகிச்சைக்கு நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்த்தார்கள் என்றும் இது சம்மந்தமாக போலிசார் விசாரிக்க விபரம் சொன்னோம் என்றும் கூறிவிட்டு எதிரிக்கு ஆதரவாக உண்மை சம்பவத்தை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**